ENC-2-TA

# இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 2

நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் தேவன் உங்களை ஊக்குவிக்கும் அனுபவத்தை பெற விரும்புகிறீர்களா? பெரும்பாலானவர்கள் ஒவ்வொருநாளும் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்து நடப்பது போன்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை சோர்வடையவும் குழப்பமடையவும் செய்யும் பிரச்சனைகள் சூழ்ந்திருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் அதிகமாக கவலை படுகிறார்கள். வாழ்க்கையே கைமீறி போனது போல தோன்றுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு கடினப்படுவதோடு சந்தோஷமாக இருப்பது அரிதானதாக காண்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? மற்றவர்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கலாம். உங்கள் கடந்த கால பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? அல்லது, நீங்களே கேட்டிடலாம், “ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவித்து ஒவ்வொரு நொடியும் சமாதானத்தோடு இருப்பது எப்படி?
ஜான் அன்கெர்பேர்கின் இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பதிலளிக்க இருக்கும் கேள்வி: “உங்கள் பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று எப்படி நிச்சயமாக சொல்லமுடியும்? எங்களோடு இணைந்துகொல்லும்படி உங்களை வரவேற்கிறோம்.

******

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்திருப்பது போல நினைக்கிறார்கள். அவர்களை சோர்வுபடுத்தும் குழப்பத்திற்குட்படுத்தும் பிரச்சனைகளால் சூழ்ந்திருக்கிறார்கள். அதிக கவலைபடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். வாழ்க்கை கையைமீறி இருப்பதுபோலிருக்கிறது. அதன் விளைவாக, தங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த கஷ்டபடுகிறார்கள் சந்தோஷம் என்பது அரிதான ஒன்றாகிவிட்டது. ஒருவேளை நீங்கள் கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் ஏற்றுகொண்டிருந்த போதிலும் கடினமாக உணரும் நண்பர்களில் ஒருவரா, வெட்கமாக உணருகிறீர்களா. அதற்கு காரணம், அவர் எவ்வளவாய் வேதத்தை வாசித்து சபையில் கலந்துகொள்கிறாரோ, அவ்வளவாய் தேவனுடைய தரத்தை அடையவில்லை என்று அறிந்துகொள்கிறார். அநேக கிறிஸ்தவர்கள் கடந்த காலத்தில் தாங்கள் செய்த பாவத்திற்காக வெட்கப்படுகிறார்கள், கிறிஸ்தவரான நாளிலிருந்து அந்த எண்ணம் இருக்கிறது. தேவன் அவர்களை நேசிக்கிறாரா என்று சந்தேகம், தங்களை மன்னிப்பாரா, என்று ஆரம்பத்திலிருந்து தொடங்குகிறார்கள்.
இப்போதும், தேவன் உங்கள் வாழ்வை காண்கிறார் என்று நினைக்கும்போது, உங்கள் நினைவிற்கு வருவது என்ன? எதை குறித்து நீங்க கூனிக்குறுகி நிற்கிறீர்கள்? பரலோக பிதாவின் உறவில் இருந்து எது உங்களை விளக்குகிறது? மனஅழுத்தம் அவமான உணர்வுகள் இருக்கிறதா? அப்படியானால், தேவன் நமக்கு அளித்திருக்கும் வாக்குத்தத்தங்களை நீங்கள் புரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த செய்திகள் தேவனுடைய வார்த்தையில் இருந்து உங்களை ஊக்குவிக்குமாறு அளிக்கப்படுகிறது, எனவே இந்த நிகழ்ச்சியையும் இதன் தொடர் செய்திகளையும் தொடர்ந்து பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.
உங்களை நான் ஒரு கேள்வி கேட்க்கிறேன்: நீங்க சின்ன பாவீன்னு நினைக்கிறீர்களா இல்லை பெரிய பாவியா? பலரும் தங்களை சின்ன பாவிஎன்று நினைக்கிறார்கள். அவங்க பாவம் செய்யறாங்க, ஆனா அதெல்லாம் சின்னதுதான், பெரிய பாவங்கள் இல்லை. தேவன் அவர்கள் மீதும் கோபமடைகிறார் என்று அறியாமல் இருக்கிறார்கள். சில வெள்ளை பொய்களை பேசியிருப்பதை ஒத்துகொள்கிறார்கள், சில சமயங்களை முன்கோபம் அதிகரிகிறது, ஆனா நா சபைக்கு போறேன்னு டக்குனு சொல்லிடுவாங்க, ஜெபிக்கிறேன் தேவனுக்கு காணிக்கை கொடுக்கிறேன். அவங்க விபச்சாரம் செய்யல, கொள்ளையடிக்கவில்லை கொலை செய்யவில்லை. இதெல்லாம் பெரிய பாவம் என்கிறார்கள். நீங்களும் அப்படிதானா?
இன்னொரு பக்கம் பார்க்கும்போது, இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களில் சிலர் தங்களை மகா பெரிய பாவிகளாக நினைத்துகொண்டிருக்கிறீர்கள். எல்லாற்றையும் செய்திருக்கீங்க, மறுபடியும் மறுபடியும் செய்தீங்க. நீங்க ஒருவேளை விபசாரம் செய்திருக்கலாம் உங்கள் ஆண் அல்லது பெண் நண்பரோடு பாலுறவில் ஈடுபட்டிருக்கலாம். நீங்க மதுபானம் போதைக்கு அடிமையாக இருந்திருக்கலாம். ஒருவேளை இரகசியமாக கருகலைப்பு செய்திருக்கலாம், ஓரின சேர்க்கையில் ஈடுபட்டிருக்கலாம், யாரிடமிருந்தாவது மனத்தை திருடியிருக்கலாம், அதைவிட அதிகமா, கோபத்துல யாரையாவது காயப்படுத்தவோ கொலைசெய்யவோ முயன்றிருக்கலாம். இந்த மாதிரியான காரியங்களை செய்திருப்பதால் இன்னமும் செய்துகொண்டிருப்பதால் நீங்க உங்களை மகா பாவி என்று நினைத்துகொள்கிறீர்கள். தேவன் உங்களை நேசிப்பதில்லை என்று நினைக்கிறீர்கள், உங்களை நீங்களே மன்னிப்பதில்லை.

சரி, உங்களை அதிர்ச்சியடைய செய்யும் ஒரு காரியத்தை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இதுவரை உங்களை மகா பெரிய பாவியாக எண்ணாமல் இருந்திருந்தால், உங்கள் வாழ்க்கை செய்கையின் மூலம் தேவனை ஈர்க்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தால், இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷத்தின் நற்செய்தியை நீங்கள் விளங்கிக்கொள்ள முடியாது என நினைக்கிறன். தேவ சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உங்களால் அனுபவிக்க முடியாது. தேவனுடைய இரக்கம் உங்களுக்கு அவசியம் என்பதை நீங்கள் நன்றாக உணரும்போதுதான் தேவனிடத்தில் வர வேண்டிய விதத்தில் நீங்கள் வந்திடுவீர்கள்.

நான் சொல்ல விரும்புவதை விளக்கமாக சொல்ல முடியுமான்னு பார்க்கிறேன். கலாத்தியர் 5ல் வேதம் கூறுகிற பதினைந்து பாவங்கள் பட்டியலிட பட்டிருக்கிறது, “இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.” (கலாத்தியர் 5:19-21) முதல் ஐந்து காரியங்களை பெரிய பாவங்களாக பார்க்கிறார்கள். அவை எதுவென்றால் விபசாரம், வேசித்தனம், அசுத்தம், விக்கிரகாராதனை பில்லிசூனியம். பாவ பட்டியலின் இறுதியில் களியாட்டுகள் வெறிகள் குறிப்பிடபட்டிருப்பதை பார்க்கிறோம். ஆனா பெரிய பாவங்கள் என்று சொல்லப்படுகிறவைகளின் நடுவில், வேதாகம பாவ பட்டியலில் இருப்பவை பகைகள், சண்டைகள், பொறாமைகள், கோபங்கள், வைராக்கியங்கள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், கொலைகள். இந்த பாவங்கள் கூட உங்களை பரலோகத்தை விட்டு விளக்கி வைத்திடும். இவை பெரியதென்று நீங்க நினைக்கல, ஆனா தேவன் நினைக்கிறார்.

இந்த பாவங்களை இன்னும் கூர்ந்து கவனிக்கலாம். நீங்க யாருகிட்டயாவது சொல்லியிருகீங்களா, “நா உன்ன வெறுக்கிறேன்! வெறுப்பது என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஒரு செய்கை மூலமாக உங்கள் பாணியில் நீங்க பழிவாங்க முயல்கிறீர்கள் என்பதாகும், அல்லது உங்க வார்த்தை அவர்களை காயப்படுத்தி சுக்குநூறாக உடைத்திட கூடும். அந்த பாவத்தை நீங்கள் செய்திருக்கீங்களா? சண்டை அல்லது பிரிவினை என்பது ஒரு நபர் மீது விரோதத்தை வைத்துகொண்டு தொடர்ந்து இரு நபர்களுக்கு இடையில் பிரச்சனையை கிளறிக்கொண்டே இருப்பதாகும். பொறாமை என்ற பாவம் பெரும்பாலும் உங்களை விட வசதியில் உயர்வாக இருப்பவர்களை பார்க்கும்போது அதினால் காயப்பட்டு நிற்கும்போது ஏற்ப்படும் உணர்வின் விளைவாகும். அவங்ககிட்ட பெரிய வீடு இருக்கும், நல்ல காரை வைத்திருக்கிறார்கள், உங்களை விட சிறந்த வேலையில் இருக்கிறார்கள். அந்த விஷயம் உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். அடுத்தாக வேதம் வைராக்கியம் கோபத்தின் வெளிப்பாட்டை கூறுகிறது. நீங்க எவ்வளவு எளிதில் கோபப்படுவது வழக்கம்? அடுத்தது சுய நலமாக இருத்தல். உண்மையாகவே உங்களுக்குரிய காரியங்களை பார்ப்பதில் அதிக கவனம் செலுத்துகிறீர்களா? ஜனங்கள் தேவனை பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை விட உங்களை பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? இந்த பாவ பட்டியலின் இறுதியாக உங்களை பரலோகத்தை விட்டு விளக்கி வைக்கும் மற்றொன்று மார்க்கபேதங்கள், தொடர்ந்து ஒரு விஷயத்தை பற்றி விவாதித்தல் ஏற்றுகொள்ளாதிருத்தல், விரோதங்கள், பேராசை, பேராசை என்பது மற்றவர்களுக்கு சொந்தமான பொருளை தனக்கு உரியதாக உரிமை பாராட்டுவது. இந்த காரியங்களில் ஏதாவது இருக்கிறதா?
நினைவிருக்கட்டும், இந்த பாவங்கள் எல்லாம் விக்கிரகாராதனை பில்லிசூனியத்தோடு இணைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, தேவனுக்கு மேலாக எது இருந்தாலும் அது விக்கிரகாராதனை தான். அது விளையாட்டாகவோ, தொலைகாட்சியாகவோ, பொருட்கள் வேலை யாகவோ, பெருமையாகவோ இருக்கலாம். தேவனுக்கு மேலாக இவைகளை நிறுத்தினால், அது விக்கிரகாராதனை/ இந்த நிலை வரைக்கும் தேவன் உங்களை நியாயந்தீர்க்க நேரிட்டால், இந்த பாவங்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட பாவங்கள் செய்திருந்தாலோ அதை திரும்ப திரும்ப செய்திருந்தாலோ, உங்கள் வாழ்வை குறித்து என்ன முடிவை எடுத்திடுவார்? பரலோகம் செல்ல அனுமதிப்பாரா? அதை பற்றி நீங்க யோசிக்கிற இந்த நேரத்தில், உங்களுக்கு அதிர்ச்சியளிக்கும் இன்னொரு உதாரணத்தை தருகிறேன். 1 கொரிந்தியர் 6 ல் ஒருவேளை ஜனங்கள் இந்த பாவங்களை செய்தால், அவர்கள் துன்மார்கர் எனப்படுவார்கள். அந்த பட்டியலில் இருப்பவை வேசிமார்க்கத்தார், விக்கிரகாராதனைக்காரர், ஆண்புணர்ச்சிக்காரர் சுயபுணர்ச்சிக்காரர், மற்றும் திருடர்கள். ஆனா இந்த பாவங்களின் வரிசையில் அடுத்தது “பொருளாசைக்காரர்கள்.” பொருளாசைக்காரர் என்பவர்கள் தங்கள் தேவைக்கு மிஞ்சினத்தை விரும்புகிறவர்கள். அடுத்து சொல்லப்பட்டிருப்பது “உதாசினர்”, மற்றவர்களுடைய சுபாவம் தன்மையை பற்றி அவதூறாக பேசி அவர்ள் பெயரை கெடுக்க நினைப்பவர்கள். அடுத்து சொல்லப்பட்டிருப்பது “கொள்ளைகாரர்கள்”, பணத்திற்காக மற்றவர்களை ஏமாற்றுகிறவர்கள், சொத்துகளை அபகரிக்க தவறான செய்தியை பரப்புகிறவர்கள். இந்த பாவங்ளில் எதை குறித்தாவது வெட்கப்படுகிறீர்களா? சரி, சிறிய பாவங்கள் என்று கருதப்படுகிற இவை பெரிய பாவங்களின் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது. (1 கொரிந்தியர் 6:9-10) வேதம் கூறுகிற காரியம் என்னவென்றால் இந்த வாழ்க்கையில் சில பாவங்கள் மிக பயங்கரமான விளைவுகளை உண்டாகிடும். சில பாவங்களாய் மற்றவர்களை விட நாம் அதிகமாய் நேசிப்பவர்களை காயப்படுத்தும். சில பாவங்களின் விளைவு மற்றவைகளைவிட அதிக உடல்நல கேட்டை உண்டாக்கும். தேவனுக்கு முன்பு, பலவிதமான பாவங்கள் இருப்பதாக காணப்பட்டாலும், எல்லாமே பாவமாகதான் கருதப்படுகிறது. சிலவேளைகளில் நம்மை நாமே மகா பாவி என்ற நிலையில் பார்க்காமல் இருப்பதற்கு காரணம், கொடுமையான பாவியல்ல, என்பதற்கு காரணம் நம்மை தேவனின் தரத்தோடு ஒப்பிடாமல் மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்க்கிறோம்.
நீங்க எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, “நா, அந்த நபரை போல நல்லவன் ; அவன் தவறு செய்தால், நானும் தவறு செய்வேனா?” அது ஒருவேளை சரியாக இருக்கலாம், ஆனா அவன் தவரே செய்யவில்லை என்றால், நீங்களும்

தவறு செய்யாதவராக இருந்திடலாம். அதாவது, நீங்க மரித்து தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கிறீர்கள் என்று வைத்துகொள்வோம். உங்கள் அயல்வீட்டார், அவர்களோடு உங்களை ஒப்பிட்டு சொல்லுகிறவர்களாக இருந்திடலாம், உங்களுக்கு முன்பு தேவனிடம் போகலாம். தேவன் அவனுடைய வாழ்வை ஆராய்கிறார், அவனுடைய சிறிய பாவங்களான எல்லாவற்றையும் பார்க்கிறார், ஆழ்ந்த வருத்தத்தோடு நரகத்திற்கு செல்ல வேண்டும் என்ற தீர்ப்பை அவனுக்கு வழங்கிடுவார். தேவன் அவனை வெளியே அனுப்பும்போதுதான், உங்களுக்கு புரியவரும் தேவனுடைய தரமும் அவர் வேதத்தில் கொடுத்ததிற்கும் பிரமாணங்கள் அனைத்தும், உங்கள் அயல் வீட்டுகாரர் பெரும்பாவி என்று கூறுகிறது. உங்களுடைய அயலானை போல நீங்களும் அதே பாவங்களை செய்தால் அடுத்தது வரிசையில் நிர்ப்பது நீங்க தான். அப்போது உங்கள் உணர்வு எப்படி இருக்கும்? அதை கண்டுபிடிக்க நீங்கள் மரிக்கும்வரை காத்திருப்பீர்களானால், அது தாமதமான விளைவாக இருக்கும். உங்களை நீங்கள் தேவனுடைய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும், சரியா.

தேவனுக்கு முன்பாக நம்முடைய உண்மையான நிலையை பற்றி இன்னொரு உதாரணத்தை தருகிறேன். ஒரு நிமிடம், வேதாகமத்தின் அனைத்தும் கற்பனைகளையும் யோசித்து பாருங்கள். எது மேலான கற்பனை என்று நினைக்கிறீர்கள், எந்த கற்பனையை மிக முக்கியமானதாக கடைபிடிக்க வேண்டும்? மத்தேயு 22ல் இயேசு கூறுகிறார், “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இதுவே பிரதான கட்டளையாயிருக்கிறது. இதற்கு இணையான இரண்டாம் கட்டளை; உன்னை போல பிறனையும் நேசி. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுவதும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது.” (மத்தேயு 22:37-39)

சரி, முழு வேதாகமத்திலும் இந்த இரண்டு கற்பனைகள்தான் பிரதானமானவை என்றால், அதை கடைபிடிக்கிறீர்களா? தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் ஆத்துமாவோடும் அன்புகூருகிறவர்களாக இருக்கிறீர்களா? இல்லை என்று சொன்னால், நீங்க தேவன் மனிதனுக்கு கொடுத்த பிரதான கட்டளையை உடைத்துவிட்டீர்கள். அப்படின்னா, தேவனுடைய நியாயதீர்ப்பிற்கு பாத்திரவான்களான பாவிகளாயிருக்கிறோம். நீங்க ஒருவேளை சொல்லாம், “ஜான், இதை சொன்னதற்காக நன்று. இன்றைக்கு இது எனக்கு தேவை படுகிறது. உங்கள் நிகழ்ச்சியை பார்க்க உட்கார்ந்ததால சந்தோஷப்படுகிறேன். தேவனிடத்தில் இருந்து ஏதாவது நல்ல செய்தி இருக்கா? அதற்கான பதில் ஆமாம்.

நாம இதை எவ்வாளவு பெரிதாக்கியிருக்கிறோம் என்று எதற்காக புரிந்துகொள்ள வேண்டும், தேவனுடைய சமாதானத்தையும் மன்னிப்பையும் அனுபவிப்பதற்கு முன்பு எவ்வளவு பாவம் செய்திருக்கிறோம் தெரியுமா? காரணம் என்னன்னா, பரிசுத்த தேவனுக்கு முன்பாக எவ்வளவு பெரிய ஆபத்தில் நிற்கிறீர்கள் என்பதை அறியாமல், தேவனை ஈர்க்கும்படியாக உங்களிடத்தில் எதுவும் இல்லை என்று புரிந்துகொள்ளாமல், உங்களை பாவங்களை மன்னிக்க வழியில்லை என உணராவிட்டால், தேவன் உங்களுக்காக அளித்திடும் அருமையான இரட்சிப்பை பற்றி உங்களுக்கு புரியாது. நீங்க ஏதோ செய்திருக்கீங்கன்ற எண்ணத்தை தூக்கி எரிந்திடுங்கள், நீங்க சபைக்கு போகறதாலதான், உங்களால் முடிந்த அளவு நல்ல மனுஷனா இருக்கிறதால, நற்கிரியைகளால உங்கள் பாவங்கள் நிவிர்த்தியகாது. அப்படி இல்லை.

உதாரணமாக, நீங்க சாலையில் வாகனத்தில் போகும்போது ஒரு காவல் அதிகாரியால பிடிபடுகிறீர்கள் என்று வைத்துகொள்வோம். வேக அளவை தாண்டி ஒரு மணிக்கு இருபது மைகள் பிரயாணிக்கிறீர்கள். அவரிடம் நீங்க சொல்றீங்க, “நீங்க, சொன்னது சரிதானம் ஆபீசர். இந்த முறை சட்டத்தை மீறிவிட்டேன், ஆனா கடந்த மூன்று வருடங்களா ஒவ்வொரு நாளும் வேக அளவிற்கு கட்டுப்பட்டு இருந்திருக்கேன். நா தப்பித்துகொள்ள அது எனக்கு போதுமானதாக இருக்குமே?” காவல்துறை அதிகாரி என்ன சொல்வாரு தெரியுமா. அவர் உங்களிடம், அது பிரயோஜனமே இல்லை. கடந்த காலத்தில் நீ சரியாக இருந்திருக்கலாம், ஆனா அதையே தான் இன்னைக்கு உன்னிடத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. நீ நன்றாக வாகனத்தை ஓட்டுகிற தன்மை இன்றைய மீறுதலுக்கு ஈடாகாது என்பார்.”

தேவனுடைய நீதியான கர்ப்பனைகளின்படி, மறுபடியும் மறுபடியும் அவருடைய கற்பனைகளை தகர்த்திருக்கிறோம். நேர்த்தியாக வாழும்போதும், நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கப்படுகிற விதமாக இருக்கிறோம். அது தேவனிடத்தில் நமக்கு கூடுதல் மதிப்பெண்களை சேர்ப்பதில்லை. நம்முடைய மீறுதல்களை நமது சுபாவத்தால் நிராகரித்திட செய்ய முடியாது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதுகிறார் ரோமர் 3:19 ஒருநாளில், “வாய்கள் யாவும் அடைக்கப்படும். எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.” வேறு மாதிரி சொன்னால், நமது கிரியைகளினால், நாம் எப்படி வாழ்கிறோம் என்கிற விதங்கள், தேவனுடைய தரத்திற்கு ஏற்றவாறு இருக்கிறோம் என்று எதை வைத்தும் சொல்லவே முடியாது.

ஆனா 21ம் வசனத்தில் பவுல் கூறுகிறார், “இப்படியிருக்க நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது.” அதாவது, அவருடைய எதிர்ப்பார்ப்பின்படி வாழ முயற்சிக்கிறோம் என்ற அடிப்படையில் தேவன் நமக்கு நீதியை அளிக்கவில்லை. தேவன் அளிக்கும் இந்த நீதி எங்கிருந்து எப்படி வருகிறது? ஒரு கேள்வியின் மூலம் உங்களுக்கு இதற்கான பதிலை தருகிறேன். ஒருநாள் நீங்க தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிர்கவேண்டியிருந்தால் இயேசு அப்ப தனது கிரியையை பயன்படுத்திட அனுமதியளித்தால், அவருடைய பரிபூரணமான

வாழ்க்கை முன்வைத்து தேவனிடத்தில் தயை பெறலாம் என்று நினைத்தால், அதில் தேவன் பிரியப்படுவார் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக பிரியப்படுவார். வேதத்தின்படி இது தேவன் அளிக்கும் ஈவாக இருக்கிறது.
ஆனா இன்னொரு பிரட்சனையும் இருக்கிறது, நமது பாவங்கள். நம்முடைய பெரும்பாலான மீருதல்களுக்கு தேவன் கண்ணை மூடிக்கொண்டு இருக்கமாட்டார். அவை தண்டிக்கப்படனும் இல்லன்னா அவர் பிரபஞ்சத்தின் சீரற்ற நியாயாதிபதியாவார், பரிசுத்தமும் நீதியும் இல்லாத தேவனாவார். அதனால் தேவன் என்ன செய்தார்? அதற்கான விடை மறுபடியும் இயேசுதான். அவர் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, இயேசு சிலுவைக்கு சென்று உங்களுடைய என்னுடைய பாவங்களை பிதா தன்மீது சுமத்த அனுமதித்தார். நீங்களும் நானும் செய்த பாவங்கள் செய்யப்போகிற தவறுகள் எல்லாவற்றிற்கும் சேர்த்து பிதாவானவர் இயேசுவை தண்டித்துவிட்டார். உங்களுக்கு புரிகிறதா தேவனுடைய மீதமிருந்த கோபம் அனைத்தும், எல்லா ஆக்கினையும், நரகத்திற்கு பாத்திரமான யாவும், இயேசு சிலுவையில் இருந்தபோது அவர்மீது சுமத்தப்பட்டது தெரியுமா? நமது பாவத்திற்கு நம்மால் செலுத்தமுடியாத விலைகிரையத்தை இயேசு முழுவதுமாய் செலுத்திவிட்டார்.
இப்போது இயேசு பாவிகளுக்கு ஒரு வாய்ப்பை தருகிறார். முதலில், அவர் கேட்க்கிறார், “உனது பாவத்தின் பிரச்சனையை நான் பார்த்துகொள்வேன் என நீ நம்புகிறாயா? உன்னை உள்ளிருந்து மாற்றுவதற்கு உன்னுடைய வாழ்வில் நீ எனக்கு இடமளித்திடுவாயா?”இரண்டாவது, “உன் பாவத்தை உன்னோடு வைத்துகொண்டு, மரித்து தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நிற்கையில், அங்கு நீ நீதியை நியாயந்தீர்க்கப்பட்டு, அதினால் அவமானப்பட்டு, உன்னுடைய பாவங்களுக்காக தேவனுடைய கோபாக்கினையை பெற்று நரகத்தில் தள்ளப்படுவதை விரும்புகிறாயா?” இதை பற்றி யாரும் அதிகம் யோசிக்க துணிய மாட்டீர்கள் என நினைக்கிறேன். இப்போதே நீங்க இயேசுவை ஏற்றுகொள்ள முடியாமல் இருப்பதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா?
வேதம் வாக்குத்தருகிறது, “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.” (யோவான் 3:16-17)

******

உங்களுக்கு நினைவிருக்கிறதா ரோமர் 3:19ஐ வாசிக்கும் போது பவுல் கூறுகிறார் நம்முடைய பாவங்களினால் யாருமே தேவனுடைய பார்வையில் நீதிமான்களாய் காணப்படுவதில்லை என்கிறார். அறிவிக்கப்படுவதில்லை என்பதற்கு நியாயந்தீர்க்கப்படுதல் என்று அர்த்தமாகும். ஒரு நீதிமன்ற அறையில், எல்லா ஆதாரங்காலும் இருக்க, நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று தீர்ப்பளித்து அவருக்கான தண்டனையை அறிவிப்பார், அல்லது இவன் நீதிமான் குற்றமற்றவன் என்று நீதி வழங்கிடுவார். நீதிபதியின் கூற்று, குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று சட்டப்பூர்வமாக அறிவிக்கிரதாயிருக்கிறது, அவர் நீதிமன்றத்தால் நிரபராதி என்று பார்க்கப்படுகிறான் என்று அர்த்தமாகும், அவன் குற்றமற்றவன், இப்ப தெளிவாகிவிட்டது.
வேதாகமத்திலும் அப்போசதளர்கள் மறுபடியும் மறுபடியும் நீதிமானாக்கப்படுதல் என்று சொல்லுகிறார்கள் ஒரு மனிதன் தனது விசுவாசத்தை கிறிஸ்துவின் மீது வைக்கவேண்டும், தேவன் நீதியுள்ள தீர்ப்பை பிரகடனம் செய்திடுவார், அவர்கள் பாவங்களுக்கு நித்திய நியாயதீர்ப்பை அளித்திடுவார். அவர்கள் நியாயன்தீர்க்கப்படுவார்கள் என்று தேவன் கூறுகிறார். அதாவது, அந்த நேரத்தில் ஒரு பாவி தனது நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வைக்க வேண்டும், அந்த நபர் எதிர்காலத்தில் தனது பாவத்திற்கான தண்டனை மற்றும் பாவத்தின் விளைவுகளில் இருந்து விடுதலை பெற முடியும் என்பார்.
ரோமர் 5: 1, கூறுகிறது, இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமாங்கலாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தாகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்று இந்த கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெற்று நிலைகொண்டிருக்கிறோம்.”
பவுல் ரோமர் 4:5ல் கூறுகிறார், “ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.” இதற்கு அர்த்தம் நாம கிறிஸ்துவை நம்பிடும் ஷனத்தில், தேவன் நமக்கு புதிய நிலையை தருகிறார், புதிய ஸ்தானம், இதுவை இல்லாத புதிய நீதியை தருகிறார். கிறிஸ்துவின் நீதியை நமக்கு கொடுத்தை நம்மை நிறுத்துகிறார். அதை எப்படி பெறுகிறோம்? ரோமர் 3:22ல் பவுல் கூறுகிறார், “அது இயேசுகிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே விசுவாசிக்கிற எவருக்குள்ளும் அது பலிக்கும்.”
தேவன் உங்களை அவரிடம் வந்து உங்கள் விசுவாசத்தை கிறிஸ்துவின் மீது வைக்கிறீர்கள் உங்களுக்கு பதிலாய் சிலுவையில் அவர் தொங்கியதை விசுவாசிக்கிறீர்கள் என்று சொல்லும்படி விரும்புகிறார். தேவனிடத்தில் உங்கள் வாழ்வின் பாவங்களில் இருந்து மன்னித்து சுத்திகரிக்கும்படி கேட்டால், அவர் செய்வார். வாக்களித்திருக்கிறார். ஆனால் உங்களில் சிலர் அப்படி செய்திருந்தாலும், நீங்க பின்மாற்றம் அடைந்து பெரிய பாவங்களை செய்திருக்கிறீர்கள். உங்களுடைய பாவம் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவு குறைவாய் தேவன் மன்னிப்பார் என கருதுகிறீர்கள். அதேமாதிரி, உங்க பாவங்கள் கம்மியாயிருந்தா, அதிக மன்னிப்பு இருக்கும் என்கிறீர்கள். ஆனா அது உண்மை

இல்லை. நீங்க ஒன்றை தெரிந்துகொள்ள வேடும், தேவனுடைய குமாரன் அவருடைய மரணம் உங்கள் சார்பில் சிந்தின இரத்தம் இதுவரை நீங்க செய்த செய்யப்போகிற பாவங்களை விட மேலானதாக இருக்கிறது. வேதாகமத்தில் எந்தவொரு இடத்திலும் தேவன் நீங்க செய்த இந்த பாவத்தை தவிர எல்லாவற்றையும் மன்னித்துவிட்டார் என்று சொல்லப்படவில்லை. இயேசு எல்லாவற்றிற்கும் செலுத்திவிட்டார்.

1கொரிந்தியர் 6:9ல் இருக்கும் பெரிய பாவங்கள் நினைவிருக்கட்டும் அதில் இருப்பவை, “வேசி மார்க்கம், விக்கிரகாராதனை, ஆண் புணர்சிக்காரர், சுய புனர்ச்சிக்காரர், திருடர்கள், வெறியர்கள், உதாசினர், கொள்ளைக்காரர்.” அடுத்த வசனம் என்ன சொல்கிறதென்று கவனியுங்கள், “உங்களில் சிலர் இப்படிபட்டவர்களாய் இருந்தீர்கள்.”வேற மாதிரி சொன்னா, அவங்க கிறிஸ்துவிடம் வந்தபோது, தேவன் அவர்களை மன்னித்து, அவர்களை மாற்றி சுத்திகரித்திருக்கிறார். மேலும் கூறுகிறது, “ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் தமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள் நீதிமானாக்கப்பட்டீர்கள்.” 1 கொரிந்தியர் 6:11 முழுவதுமாய் மன்னிக்கப்பட்டிருக்கிரார்கள். மன்னிப்பு என்ற காரியத்தை சரிபடுத்தாமல், தேவனுடைய சந்தோஷத்தை உங்களால் அனுபவிக்க முடியாது! உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதா என்ற விதை உங்களுக்குள் இருந்தால், உங்களுக்கு சமாதானமே இல்லாமல் போகும்.

எபிரேயர் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, “ நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனசாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! எபிரேயர் 9:14

நீங்க எந்தமாதியான பாவம் செய்திருந்தாலும் சரி, எந்தமாதிரியான அவமான உணர்வு இருந்தாலும் சரி, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உங்களுக்காக சிந்தப்பட்டிருக்கிறது என்று தேவன் கூறுகிறார். விசுவாசத்தோடு அவரிடத்தில் வந்து உங்களை மன்னிக்கும்படி அவரிடம் கேட்கும் நேரத்தில், நீங்கள் முழுவதுமாய் மன்னிக்கப்படுவீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம்பண்ணி உங்கள் மனசாட்சியை செத்த கிரியைகள் இல்லாமல் சுத்திகரிப்பார் என தேவன் வாக்களிக்கிறார் உங்களுக்கு இருப்பவை மறைந்திடும். நீங்க ஒருவேளை, இது உண்மையாயிருந்தா நல்லாயிருக்கும் என்றுகலாம்.” அதைதான் தேவன் வேதாகமத்தில் வாக்கு பண்ணியிருக்கிறார்.

விசுவாசம் எங்கிருந்து வரும் மனந்திருப்புதல் என்றால் என்ன? விசுவாசம் என்பது தேவனுக்கு முன்பாக வருவதற்கு முன்னாள் சுத்தம் பண்ணிக்கொள்வதல்ல, தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவேன் என்று ஒப்புதல் அளிப்பதல்ல, தேவனுக்காக புதிய வாழ்க்கை வாழ்ந்திடுவேன் என்று வாக்கு கொடுத்து சத்தியம் செய்வதல்ல. விசுவாசத்தின் பிரதிபலிப்பில் இந்த காரியங்கள் இருக்கும், ஆனா விசுவாசத்தையும் விசுவாசத்தின் பலன்களையும் குழப்பிக்கொள்ள கூடாது. தேவனுக்கு முன்பாக நீதியை அடையும் விசுவாசம் கிரியைகளினால் உண்டான விசுவாசமாக இருக்கவேண்டியதில்லை. மாறாக, கிறிஸ்து யார் என்ற அறிவில் விசுவாசம் அடங்கியிருக்கிறது, அவருடைய வாழ்க்கை உங்களுக்காக அவர் சிலுவையில் மறித்தது, கிறிஸ்துவின் மூலமாக தேவன் உங்களுக்கு அளிக்க விரும்பும் மன்னிப்பு மற்று இரட்சிப்பை பற்றியது. ஆனா இரட்சிப்பின் காரியங்களை அறிவுபூர்வமாக அறிந்துகொள்வது மட்டும் விசுவாசமல்ல, அந்த உண்மைகளோடு இசைந்திருக்க முன்வருவதே விசுவாசம். இறுதியாக, அது நம்பிக்கையோடு இணைகிறது. இரட்சிக்கும் விசுவாசத்திற்கு மூன்று பகுதிகள் இருக்கிறது.

உங்களுக்கு சந்தோஷமும் சமாதானமும் இல்லாமல் இருபதற்கு காரணம் இந்த மூன்றில் ஏதோவொன்றை நீங்கள் தவற விட்டிருக்கலாம். தேவன் சொல்வதை பற்றிய அறிவு உங்களுக்கு இருக்கலாம், தேவன் சொல்கிரவற்றை நீங்கள் ஏற்றுகொண்டிருக்கலாம், ஆனா உங்களில் சிலர் உங்களையே நம்பாமல் இருக்கிறீர்கள், உங்கள் இறுதி முடிவு கிறிஸ்து என்றும் நம்பவில்லை. இதை உங்களுக்கு விளக்கி சொல்ல முயலுகிறேன்.

இதை கதை பிரசித்திபெற்ற கயிற்றில் நாடாகும் ஒருவரை பற்றியது அவர் நயாகரா நீர்வீழ்ச்சியில் கேனடா பகுதியில் இருந்து அமெரிக்க பகுதியில் வரும்படி இடையில் ஒரு கயிற்றை தொங்க விட்டிருந்தார். நீர் வீழ்சிக்கு நடுவில் அவர் நடக்க இருப்பதை பார்க்க கூடினவர்களை கண்டு அதிர்ந்துபோனார்.

அடுத்து, அவர் ஒரு சர்க்கர தள்ளுவண்டியில் மூன்று மணல் மூட்டைகளை வைத்தார், மனிதனுடைய எடை அளவின்படியே வைத்தார். மறுபடியும் அந்த மணல்மூட்டை வண்டியை நீர்வீழ்ச்சியின் நடுவிலிருந்த கயிற்றில் தள்ளி விட்டார். கூட்டத்தார் ஆனந்தமாக கைகளை தட்டிகொண்டிருந்தார்கள்.

கூட்டத்தார் அமைதியான பிறகு, அவர் அவர்களிடம், “எத்தனை பேர் இந்த வண்டியில் நான் ஒரு நபரை உட்காரவைத்து பத்திரமாக முன்னும் பின்னும் இழுப்பேன் என நம்புகிறீர்கள் என்றார். பார்வையாளர்களில் இருந்த எல்லாரும் உடனே தங்கள் கரங்களை உயர்த்தினார்கள். அவர்கள் அவரிடம், “உங்களால, செய்ய முடியும் என்றனர்.” அதற்கு அவர், சரி, என்னால முடியுன்னு நீங்க நம்பினால், யார் முதலில் இந்த சர்க்கர வண்டியில் உட்கார முன்வருகிறீர்கள் என்றார்?

ஒருத்தரும் முன்வரல! பாருங்க, அவங்களுக்கு அறிவுபூர்வமான நம்பிக்கை இருந்தது அந்த மனுஷனால பத்திரமா நீர்வீழ்ச்சியை கடக்க முடியும், ஆனா அவங்களே அந்த சர்க்கர வண்டியில் அவரை நம்பி உட்கார முடியவில்லை. உங்களில் சிலருக்கு இயேசுவிடம் உள்ள நம்பிக்கை இதுபோன்றதுதான். கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்றும் தேவன் அவர்நிமித்தம் உங்கள் பாவங்களாய் மன்னிப்பார் என்றும் உங்களுக்கு தெரியும், நீங்க ஒரு பாவி என்றும் உங்களுக்கு இரட்சகர் அவசியம் என்றும் தேவனோடு ஒத்துகொள்கிறீர்கள், ஆனாலும் நீங்க இயேசுவை நம்பி இன்னும் உங்களை அவர் கரத்தில் ஒப்புகொடுக்கவில்லை. சுருக்கமாக, என்னுடைய உங்களுடைய இரட்சிப்பு ஒரே ஒரு

கேள்விக்கான விடையின் அடிப்படையில்தான் இருக்கிறது: கல்வாரியில் அவர் எனக்காக மறித்து என் பாவத்திற்கான விலையை செலுத்திவிட்டார் என்பதை விசுவாசிப்பதின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ள ஆயத்தமாக இருக்கிறேனா?

மனந்திரும்புதல், இதை பொறுத்தவரையில், உண்மையான விசுவாசத்தின் பிரதிபளிப்பாக இருக்கிறது. என்னுடைய இருதயத்தில் ஏற்ப்பட்ட மாற்றத்தால் பாவத்தை விட்டு விலககுகிறேன், ஏதோவொன்று என் இருதயத்தில் நடக்கலாம் என்பதால் அல்ல. மனதிரும்புதல் என்னுடைய சித்தப்படி நான் செயல்பாடு முற்படுதல், அதற்கு காரணம், விசுவாசத்தினால் கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்டபோது தேவன் என் இருதயத்தில் நடப்பித்ததன் விளைவு. இயேசுவை ஏற்றுக்கொண்டு தமது கிருபையின்படி நமக்குள் கிரியை செய்கிறதினால் உண்டாகும் அனுபவத்தால் வருவதுதாம் மனந்திரும்புதல். இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நீங்க உங்கள் பாவங்களில் இருந்து தேவன் அளிக்கும் மன்னிப்பை பெறுவதற்கு ஒரே வழி, இயேசவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசியுங்கள். உங்கள் பாவ நிவிர்த்திர்காக சிலுவை அவர் மரித்தார்; அவர்தான் உங்கள் கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிறார். ஜனங்களுடைய இரட்சிப்பிற்காக இதை செய்யவேண்டும் என்று தேவன் எதையும் நம்மீது திணிப்பதில்லை. அவை கிரியைகளின் பளுவை அவர்களுக்கு அளித்து தேவன் கிருபையாய் அவர்கள் வாழ்வில் கிரியை செய்வதை மங்கிட செய்திடும்.

ரோமர் 10:9 மற்றும் 10 தெளிவாக நமக்கு சொல்லுகிறது, “கர்த்தராகிய இயேசுவை நமது நாவினால் அறிக்கைசெய்து தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இருதயத்தில் விசுவாசித்தால், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.” கிறிஸ்துவின் மீது உங்கள் விசுவாசத்தை வைத்து உங்கள் பாவங்களை அவர் எடுத்துபோட அவரிடம் வர ஆயதமா? அப்படியானால், இப்போது நான் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறேன் நீங்களும் என்னோடு சேர்ந்து ஜெபிக்கும்படி அழைக்கிறேன். “அன்பின் தேவனே, இயேசு மரித்து என் பாவங்களுக்கான விலையை செலுத்தினார் என நம்புகிறேன். நீரும் என்னை நேசித்து என் பாவங்களை மன்னித்து என்னை சுத்தகரித்து என்னை மாற்ற ஆவலாக இருக்கிறீர் என நம்புகிறேன். பல காரியங்களில் நான் தவறி இருக்கிறேன். உம்மை என்னுடைய வாழ்வில் நான் வரவேற்கிறேன் முழுமையான மன்னிப்பு என்னும் ஈவை நான் பெற்றுகொல்கிறேன். இயேசுவுக்குள் என்னுடைய நம்பிக்கையை வைக்கிறேன். அவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.”

இயேசு சொல்லுகிறார், “நானே நல்ல மேய்ப்பன். என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும், அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் என்னை பின்பற்றும். அவைகளுக்கு நான் நித்திய ஜீவனை தருகிறேன், அவை ஒருபோதும் அழிந்துபோவதில்லை; ஒருவனும் என் கரங்களில் இருந்து அவைகளை பரிப்பதுமில்லை.

சரி, கிறிஸ்தவர்களாக இருக்கிற சிலர் ஒருவேளை கேட்கலாம், “ஜான், இன்னும் பாவம் செய்கிறேன். பாவம் செய்ய விரும்பல, ஆனாலும் செய்கிறேன்.” இந்த பிரச்சனையை நா சரிசெய்திட என்ன செய்யும் படி தேவன் விரும்புகிறார்? முதலில், வெட்கமாக உணர்ந்தால், நீங்க பாவம் செய்திருந்தா, கிறிஸ்துவிடத்தில் சொல்லும் உங்களை மன்னித்து சுத்திகரிக்கும்படி அவரிடம் கேளுங்கள். அவர் செய்திடுவார்.

அடுத்தவாரம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படியாக தேவன் கிருபையாய் நமக்கு அளித்திடும் வல்லமையை பற்றி பார்க்க இருக்கிறோம், சமாதானமும் சந்தோஷமும் பெற்று, எல்லா பாவ பழக்கத்தையும் பாவ சுபாவத்தை தகர்த்திடுவோம். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.